செ.வெ.எண்:69 நாள்:29.11.2017

திருநெல்வேலி மேலப்பாளையம் முஸ்லிம் மேல்நிலைப்பள்ளியில் டெங்கு விழிப்புணர்வு சிறப்பு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்நீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

------

திருநெல்வேலி மேலப்பாளையம் முஸ்லிம் மேல்நிலைப்பள்ளியில் டெங்கு விழிப்புணர்வு சிறப்பு நிகழ்ச்சி இன்று (29.11.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்நீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு டெங்கு விழிப்புணர்வு சிறப்பு நிகழ்ச்சியை துவக்கி வைத்து மாணவிகளுக்கு டெங்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினர். மேலும் அதிக மதிப்பெண் பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-

திருநெல்வேலி மாவட்டத்தில் டெங்கு காய்ச்சல் பாதிப்பு உள்ளது. மழை காலங்களில் அதிகரிக்க வாய்புள்ளது. டெங்கு பாதிக்க பட்டவர்களில் 100 க்கு 60 சதவீதத்தினர் பள்ளி மற்றும் உயர் கல்வி பயிலுபவர்களாக உள்ளனர். டெங்கு கொசு பகலில் கடிக்கும் மாணவ, மாணவிகள் பகல் நேரங்களில் பள்ளி, கல்லூரிகளில் இருப்பதால் இப்பகுதிகளை மிகவும் தூய்மையுடன் பராமரிக்க வேண்டும். பள்ளி கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு அதிக விழிப்புணர்வு ஏற்படுத்திடவே இது போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்படுகிறது. சிறிய கப், தேங்காய் ஓடு போன்ற சிறியவைகளில் குறைந்த தண்ணீரில் கூட கொசு உற்பத்தி ஆக வாய்ப்புள்ளது. எனவே பள்ளி, கல்லூரி நிர்வாகத்தினர், தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் தங்களது வளாக பகுதிகளில் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகளை கொண்ட குழுக்களை அமைத்து கொசு ஒழிப்பு மற்றும் தூய்மை பணிகளை மேற்கொள்ள வேண்டும். தங்களது வீடுகளை பராமரிப்பதை போல கல்வி நிறுவன வளாகங்களையும் பராமரிக்க வேண்டும். காய்ச்சல் வந்தால் மருத்துவரை அணுகுவதுடன் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். இப்பள்ளி மட்டுமின்றி இப்பகுதியில் யாருக்கும் டெங்கு காய்சல் வரத வகையில் விழிப்புணர்வு பணிகளை மேற்கொள்ள வேண்டும். என பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாநகர நல அலுவலர் மரு.பொற்செல்வன், மேலப்பாளையம் நலம் விரும்பிகள் சங்க தலைவர் திரு.ஹசன், பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி.காதர் அம்மாள் பீவி, மற்றும் பாளையங்கோட்டை வட்டாச்சியர் திரு.தங்கராஜ் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

**வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.**